ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2016/37 - 2017 අප්‍රේල් මස 26 වැනි බදාදා - 2017.04.26

*2016/37 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களைக் கையளித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் 1 ஆம் பந்தியின் நியதிகளின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட 2016.02.25 ஆந் திகதிய 1955/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட 2015.11.20 ஆந் திகதிய 1941/41 இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அட்டவணையில் பகுதி I, இலக்கம் 15 மற்றும் 16 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுவதோடு, இலக்கம் 14(இ) மற்றும் 19 இன்கீழ் புதிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டு அந்த அட்டவணையில் பகுதி I, 2017.04.26 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இத்தால் திருத்தியமைக்கப்படுகின்றது.*

*02.*

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர்கள் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 14. (இ) மேலதிக மாவட்ட செயலாளர் | 01. உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. பதவிக்கு நியமித்தல் |
| 15. இலங்கை கிராம அலுவலர் சேவையின் அதியுயர் வகுப்பு உத்தியோகத்தர்கள் | 01. உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பானஅமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்படும் மேலதிக செயலாளரொருவர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப இடமாற்றம் செய்தல் |

1A - G 25482 — 57 (2017/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று கட்டுப்பாடுகள் |
| | 02. ஏற்புடைய மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் | I. பதில் கடமை நியமனத்திற்கான அனுமதிக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சிபாரிசுகளை சமர்ப்பித்தல். |
| 16. இலங்கை கிராம அலுவலர் சேவையின் அதியுயர் வகுப்புக்கு கீழுள்ள உத்தியோகத்தர்கள் | 01. உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப நியமனம் வழங்குதல்<br>II. ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கம் செய்தலும் |
| | 02. உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக் செயலாளர்/ அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதியளிக்கப்படும் மேலதிக செயலாளரொருவர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு வழங்குதல்<br>II. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப தரம் II இலிருந்து தரம் I க்கு பதவி உயர்வு வழங்குதல்<br>III. அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் செய்தல் |
| | 03. ஏற்புடைய மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப மாவட்டத்திற்கு உள்ளே இடமாற்றம் செய்தல்.<br>II. பதவி நீக்கம் தவிர்ந்த ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் |

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | III. ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக் குழுவுக்கு சிபாரிசுகளை முன்வைத்தல்<br>IV. பதில் கடமை நியமனம் |
| | 04. ஏற்புடைய பிரதேச செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப பிரதேச செயலக அதிகார எல்லைக்குள் இடமாற்றம் செய்தல் |
| 19. சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்கள் மற்றும் உதவி சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர்கள் | 01. உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக்களுக்கு ஏற்ப நியமனம் வழங்குதல்<br>II. ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கம் செய்தலும் |
| | 02. உள்நாட்டலுவல்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுக் செயலாளர்/ அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறிப்பிடப் பட்டு அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதியளிக்கப்படும் மேலதிக செயலாளரொருவர். | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப தரம் III இலிருந்து தரம் II க்கு பதவி உயர்வு வழங்குதல்<br>II. அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு/ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்ப தரம் II இலிருந்து தரம் I க்கு பதவி உயர்வு வழங்குதல். |
| | 03. ஏற்புடைய மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர் | I. பதவி நீக்கம் தவிர்ந்த ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் |

3. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட 2015.11.20 ஆந் திகதிய 1941/41 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி செயல்வலுவில் இருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 5,
2017, ஏப்பிறல் 25.

5 - 320

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.